SYDNEY WEST Area Health Service

Produced by Sydney West Area Health Service, Multicultural Health Network & NSW Multicultural Health Communication Service.



# புட்டிகளிலும் மற்றும் பாத்திரங்களிலும் உள்ள நோய் நுண்மக் கிருமிகளை ஒழிப்பது (sterilization) எப்படி?

புட்டிகளிலும், மற்ற பாத்திரங்களிலும உள்ள கிருமிகளை ஒழிக்கும் முன்னர் அவற்றை சவர்க்காரம் (soap) கலந்த வெந்நீரில் சுத்தமாய்க் கழுவ வேண்டும்.

- கைகளைச் சுத்தமாகக் கழுவுங்கள்.
- புட்டிகளையும், அதில் பொருத்தப்படும் ரப்பர் காம்புகளையும் மற்றும் இதரப் பாத்திரங்களையும் குளிர்ந்த நீரில் அலசி பின்னர் கழுவுங்கள்.
- ஒரு புட்டித் துடைப்பான் (bottle brush) மூலம் புட்டிகளையும், காம்புகளையும் உட்புறமும், வெளிப்புறமும் சோப்பு கலந்த வெந்நீரில் கழுவுங்கள். புட்டியின் கழுத்துக்கு அருகில் உள்ள வரிப் பள்ளங்களில் (grooves) பால் சேர்வதால் இவற்றைச் சுத்தம் செய்ய மறக்க வேண்டாம். நன்றாக அலசுங்கள்.

கிருமிகளை மூன்று வழிகளில் ஒழிக்கலாம்.

- கொதிக்க வைத்தல்
- இரசாயணக் கலவையைப் பயன்படுத்திக் கிருமிகளை ஒழித்தல்
- நீராவி கொண்டு கிருமிகளை ஒழித்தல்

## கொதிக்க வைத்தல்

- எல்லாப் பொருட்களையும் கொள்ளக்கூடிய மூடி உள்ள வேவுகலம் ஒன்றைத் தேர்ந்தெடுங்கள்.
- எல்லா உருப்படிகளையும் இந்தக் கொதிகலனில் போட்டு எல்லா உருப்படிகளும் முற்றிலும் மூழ்கும் வரை போதுமான தண்ணீர் ஊற்றுங்கள்.
- நீரைக் கொதிநிலைக்குக் கொண்டுவந்து ஐந்து நிமிட நேரம் கொதிக்க விடுங்கள். அடுப்பை நிறுத்துங்கள் –– பாத்திரம் காயும் வரை கொதிக்க விட வேண்டாம்.
- பாத்திரத்தை அடுப்பிலிருந்து இறக்கி ஆற விடுங்கள். சுத்தமான கைகளால் உருப்படிகளை எடுத்து இவற்றிலிருந்து நீரை வடிகட்டிச் சுத்தமான இடத்தில் வையுங்கள்.

## இரசாயணக் கலவையைப் பயன்படுத்திக் கிருமிகளை ஒழித்தல்

சுத்தம் செய்யப்பட வேண்டிய உருப்படிகள் நிறைய இருந்தால் இம்முறை மிக உகந்ததாகும்.

**உலோகங்களைத் தவிர** எல்லாப் பொருட்களும் இரசாயணக் கலவைகளைப் பயன்படுத்திச் சுத்தம் செய்யப்படலாம். உலோகத்தாலான பொருட்களைக் கொதிக்க வைக்க வேண்டும்.

- பொருள் மீது காணப்படும் பயன்படுவதற்கான வழிமுறைகளைப் பின்பற்றி திரவக் கலவையைத் தயாரியுங்கள். இதற்கான பொருள் மாத்திரை அல்லது திரவ வடிவில் கிட்டும் (அதாவது சரியான அளவிலான இரசாயணப் பொருள் சரியான அளவு நீரில் கலக்கப்பட வேண்டும்).
- இக்கிருமி நாசினிக் கலவையில் எல்லாப் பாத்திரங்கள், புட்டிகள் மற்றும் ரப்பர் காம்புகள் ஆகியவற்றை (ரப்பர் காம்புகளில் காற்றுக் குமிழ்கள் இல்லாமல் பார்த்து) முற்றிலும் மூழ்க வையுங்கள்.
- தேவைப்படும் நேரத்திற்கு இரசாயணக் கலவையில் போட்டு வையுங்கள்.

- உருப்படிகளை எடுக்கும்போது கைகள் சுத்தமாக இருக்க வேண்டும். சுத்தமான மேற்பரப்பின் மீது உருப்படிகளை வைத்து நன்றாய்க் காய விடுங்கள்.

இரசாயணக் கலவை உள்ள கலனைச் சுத்தம் செய்யுங்கள் மற்றும் ஒவ்வொரு 24 மணி நேரமும் கலவையைப் புதுப்பியுங்கள்.

## நீராவி மூலம் கிருமிகளை ஒழித்தல்

இரண்டு வகை நீராவிச் சுத்தகரிப்பான்கள் கிடைக்கின்றன. இவை நுண்ணலை (Microwave) மற்றும் மின்சாரம் மூலம் செயல்படுகின்றன.

- புட்டிகள் மற்றும் ரப்பர் காம்புகளிலிருந்து அவற்றில் உள்ள நீர்மப் பொருட்கள் வடிய ஏதுவாக உருப்படிகளைச் சுத்தகரிப்பானில் வையுங்கள்.
- உபகரணத் தயாரிப்பாளரது கட்டளை விதிகளைப் பின்பற்றி சுத்தகரிப்பானைப் பயன்படுத்துங்கள்
- சுத்தமான கைகளால் உருப்படிகளை எடுங்கள்.

உபகரணத்தைத் தவறாமல் அவ்வப்போது சுத்தம் செய்ய வேண்டும்.